தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – மார்கழி 27

2011 ஜனவரி 11, செவ்வாய்க்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"*

நன்றாகச் சிந்தித்த பிறகே செயலில் இறங்க வேண்டும்; இறங்கிய பிறகு சிந்திக்கலாம் என்பது தவறு.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

மண் பரிசோதனை நிலையம்

***106679—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதியில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் 30 மண் ஆய்வுக் கூடங்களும், 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. மண் ஆய்வுக் கூடம் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக் கூடம் ஆகிய இரண்டும் செயல்பட்டு வரும் 16 மாவட்டங்களில், நாமக்கல் மாவட்டமும் ஒன்றாகும். இந்த மாவட்டத்திலுள்ள 2 மண் ஆய்வுக் கூடங்களும் சேந்தமங்கலம் தொகுதி உள்ளிட்ட நாமக்கல் மாவட்ட விவசாயிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருவதால், சேந்தமங்கலம் தொகுதியில் தனியாக மண் பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த பகுதிகளான சேந்தமங்கலம், கொல்லிமலை, புதுச்சத்திரம், பகுதி வட்டாரங்களாக இருக்கின்ற எருமைப்பட்டி, நாமகிரிப்பேட்டை விவசாயிகள், அந்த மண் பரிசோதனை நிலையங்களின்மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்களுக்குப் பதிலாக திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை, நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம் ஆகிய ஒன்றியங்களில் மா, பலா, வாழை, நெல், கரும்பு, மரவள்ளிக் கிழங்கு, மஞ்சள், மிளகு, காஃபி போன்ற அனைத்து விவசாயப் பயிர்களும் உற்பத்தியாகின்றன. அடிக்கடி ஏற்படும் பயிர் நோய்களைக் கட்டுப்படுத்த மண் பரிசோதனை நிலையம் அமைத்துக் கொடுத்தால் விவசாயிகள் மண் வளத்திற்கேற்ற பயிர் செய்ய உதவியாக இருக்கும். விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றிய நமது கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில், சேந்தமங்கலம் பகுதியில் மண் பரிசோதனை நிலையம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2011 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலேயே அதற்கு நான் விடை அளித்திருக்கின்றேன். நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதியில் மண் ஆய்வுக் கூடம் செயல்பட்டு வருவதைச் சுட்டிக்காட்டியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் இந்தக் கேள்வியை எழுப்பக்கூடிய காரணத்தினாலே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகின்றேன். நாமக்கல் மாவட்டத்தில் ஒரு நடமாடும் மண் ஆய்வுக் கூடம் செயல்பட்டு வருகிறது. இந்த நடமாடும் மண் ஆய்வுக் கூடம் கிராமங்களில் சென்று மண் மாதிரிகளைச் சேகரித்து, களத்திலேயே ஆய்வு செய்து விவசாயிகளுக்குப் பரிந்துரைகளை உடனுக்குடன் வழங்கி வருகிறது. 2009-2010 ஆம் ஆண்டு இந்த ஆய்வுக் கூடத்தின்மூலம் 13,950 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. மண் ஆய்வு செய்து பரிந்துரை செய்வதற்கு இப்பொழுது நாம் 10 ரூபாய் மட்டும்தான் வசூல் செய்கின்றோம். ஆனால், அதற்கு ஏற்படுகின்ற செலவு 105 ரூபாய். ஆக, விவசாயிகளுடைய நன்மையைக் கருதி அதிக செலவானாலும் குறைந்த தொகையான 10 ரூபாயைப் பெற்றுக்கொண்டு மண் ஆய்வு செய்து உரிய பரிந்துரை செய்யப்படுகிறது.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் தங்களுடைய விளைநிலங்களில் ஒரே பயிர் சாகுபடி செய்வது, மற்ற பயிர்களைச் சாகுபடி செய்வது என்று தொடர்ந்து பயிரிடுகின்ற காரணத்தினாலே நிலத்தினுடைய தன்மை மாறிவிடுகிறது. அதுமட்டுமல்ல; அந்த மண்ணில், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற பல்வேறு செயற்கை உரங்களைப் போடுகின்ற நேரத்தில் அதிலே இருக்கிற சத்துக்களையெல்லாம் ஈர்த்து வேகமாகப் பயிர்களுக்குக் கொடுக்கின்ற காரணத்தினாலே மண்ணின் இயல்பான சத்துத் தன்மை குறைந்துவிடுவதுடன், அங்கே தொடர்ந்து பயிர் செய்வதால் அந்தப் பயிர் சத்திழந்து வளர்ச்சி இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறது என்று அறிஞர்கள், வேளாண் விஞ்ஞானிகள் எல்லாம் கருத்துகளைச் சொல்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், 16 மாவட்டங்களில் மண் பரிசோதனை ஆய்வுக் கூடமும், நடமாடும் ஆய்வுக் கூடமும் இருப்பதாகவும், 13,900 மண் பரிசோதனைகள் கடந்த ஆண்டு செய்ததாகவும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இதை வரவேற்கிறோம். ஆனாலுங்கூட, ஒட்டுமொத்தமாக மாவட்டந்தோறும் இந்த நடமாடும் ஆய்வுக் கூடங்களை அமைத்து, ஒவ்வொரு விளை நிலத்தையும் மண் ஆய்வு செய்து அதில் என்ன தன்மை இருக்கிறது, என்ன உரம் இட்டால் அந்த நிலத்தை மேம்படுத்த முடியும் என்று விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினால் அது வேளாண்மைக்கு ஏதுவாக இருக்குமென்ற காரணத்தினாலே, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நடப்பாண்டில் ஒரு சிறப்புத் திட்டம் தயாரித்து, எல்லா விவசாயிகளுடைய நிலத்தையும் ஆய்வு செய்வதற்கும், அந்த மண்ணினுடைய தன்மையைப் பற்றியும், தொடர்ந்து என்ன இடுபொருள் இடலாம் என்பதையெல்லாம் அறிவதற்கும் ஆய்வு செய்ய வாய்ப்பளிப்பார்களா; அதற்கு அரசின் தரப்பிலே திட்டம் இருக்கிறதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் அவர்களுடைய நிலத்தில், இந்தப் பயிர்தான் பயிரிட வேண்டுமென்று நாம் சொல்ல முடியாது. பயிர் செய்வது விவசாயிகளுடைய விருப்பம். ஆனால், மண்ணுக்கு ஏற்றவாறு என்ன பயிர் செய்யலாம் என்று அவர்கள் ஆலோசனை பெறுகிறபோதுதான், மண் எடுத்து, ஆய்வு செய்து விவசாயிகள் இந்தப் பயிரை நடவு செய்தால் விளைச்சல் கூடுதலாக இருக்கும், நோய் தாக்காது என்று பல்வேறு ஆலோசனைகளை இந்த ஆய்வகங்கள் வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கேட்டதைப்போல, 2009-2010 ஆம் ஆண்டு 10,07,000 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. நான் முன்பு 13 ஆயிரம் என்று சொன்னது நாமக்கல் மாவட்டத்திற்காக மட்டும். 2010-2011 ஆவது ஆண்டில் டிசம்பர் 2010 வரை 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் 7,20,000 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. தமிழ்நாட்டிலுள்ள 81.93 இலட்சம் பண்ணைக் குடும்பங்களுக்கு மண் வள அட்டை

2011 ஜனவரி 11]

வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை *27,36,000* மண் வள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலுள்ள *385* வட்டாரங்களிலும் சிறு மண் பரிசோதனை நிலையம் கொண்ட வேளாண் ஆலோசனை மையங்கள் (Agri clinics) ரூ.*11* கோடியே *93* இலட்சம் ஒதுக்கீட்டில் அமைக்கத் திட்டமிடப்பட்டு இதுவரை *347* வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு மையம் அமைக்க *50* சதவிகிதம் மானியமாக அதிகபட்சமாக *3* இலட்சம் ரூபாயும் வழங்கப்படுகிறது. இந்த ஆய்வுக் கூடங்கள் தொடங்குவதற்கு ஆர்வத்தோடு சிலர் வருகிறார்கள். அதற்கு அரசாங்கமும் மானியம் தருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

போக்குவரத்து அலுவலகம்

***106512—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் போதிய வாகன எண்ணிக்கைகள் இல்லை. வாகன எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, வளர்ந்து